# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 03.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 16033/SCIC/2023

திரு டி.சின்னதம்பி — மேல்முறையீட்டாளர்
எண்.7, மூவேந்தர் தெரு
ஸ்ரீ தேவி நகர் மேற்கு
காமராஜர் நகர் அஞ்சல்
ஆவடி, சென்னை-600 071.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர் அலுவலகம்
புளியங்குடி, தென்காசி மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 13.04.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 30.05.2023 |
| 3. | முதல் மேல்முறையீட்டு மனு | 12.06.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 30.06.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 09.09.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 08.11.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 23.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம், தென்காசி அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பொருள்-18/08/1997ஆம் ஆண்டு புளியங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த பத்திரப் பதிவின் தகவல்கள் - தொடர்பாக - மாடசாமிக்கு இந்த சொத்து (சர்வே எண்.999/3 சிந்தாமணி கிராமம்) எவ்வாறு வந்தது ? அதாவது மாரியம்மா பெயரில் உள்ள இடம் மாடசாமிக்கு மாறியது எப்படி?" என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு மு.லட்சுமிகாந்த், சார்பதிவாளர், புளியங்குடி சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 30/05/2023, 30/06/2023, மற்றும் 08/11/2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரால் 08/11/2024 தேதியிட்டு அனுப்பிய தகவலை ஆணையம் பரிசீலனை செய்கையில், அவை சரியானதாக இல்லை என்று முடிவு செய்கிறது.**

**3. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், புளியங்குடி சார்பதிவகம், தென்காசி மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு, இனங்கள் வாரியாக சரியான தகவல்களோடு நகல் / ஆவணங்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகலினையும், நிறைவேற்றுகை அறிக்கையினையும் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். SA 16033/SCIC/2023</u>

**பெறுநர்**
**பொதுஅதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
புளியங்குடி, தென்காசி மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு டி.சின்னதம்பி
எண்.7, மூவேந்தர் தெரு
ஸ்ரீ தேவி நகர் மேற்கு
காமராஜர் நகர் அஞ்சல்
ஆவடி, **சென்னை-**600 071.

RG/PC